MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# திணை இலக்கியம் நவிலும் அறம்

திருமதி. க. பிரியா
உதவிப்பேராசிரியர்
(தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு)
நிர்மலா மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்.
கைப்பேசி: 9944747289 , 6381330610
மின்னஞ்சல்: priyaforteaching@gmail.com

# The Virtue Expressed in Thinai Literature

Mrs. K. Priya
Assistant professor, Department of Tamil (SF),
Nirmala college for women, Coimbatore.
E- mail: priyaforteaching@gmail.com
Cell No : 9944747289 , 6381330610

**Abstract**

In the history of Tamil literature, Sangam literature (300 BCE – 300 CE) serves as a mirror reflecting the ancient life, culture, and ethical codes of the Tamil society. These literary works divided human life into two major categories: 'Akam' (love, domestic life) and 'Puram' (heroism, generosity, politics), and clearly defined the moral principles (Aram/Dharma) applicable to each.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

During the Sangam period, Aram (righteousness/ethics) was not religiously oriented or commercially focused, as seen in later ethical texts, but was rather a natural human ethic and a disciplined way of life. Aram was prioritized among the three major goals of life: Aram (Virtue), Porul (Wealth/Material), and Inbam (Pleasure/Love). Therefore, Sangam Tamils centered ethics in all spheres of society, from the chastity of an individual's life to the just rule of a king. This article will extensively explore the distinctiveness of these ethical concepts revealed through Sangam literature, their impact on the society of that time, and their various classifications.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில், சங்க இலக்கியம் (கி.மு. 300 - கி.பி. 300) என்பது தமிழ்ச் சமூகத்தின் தொன்மையான வாழ்வியல், பண்பாடு, மற்றும் அறநெறிகளைப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடியாகத் திகழ்கிறது. இந்த இலக்கியங்கள், மனித வாழ்வைப் 'அகம்' (காதல், இல்லறம்) மற்றும் 'புறம்' (வீரம், கொடை, அரசியல்) என இருபெரும் பிரிவுகளாகப் பகுத்து, ஒவ்வொன்றிற்கும் உரிய ஒழுக்க விதிகளைத் (அறம்) தெளிவுபடுத்தின. சங்கக் காலத்தில் அறம் என்பது, பிற்கால நீதி நூல்களில் காணப்படுவது போல, சமயச் சார்புடையதாகவோ அல்லது வணிக நோக்குடையதாகவோ அல்லாமல், இயல்பான மானிட அறமாகவும், வாழ்வின் ஒழுக்க நெறியாகவும் இருந்தது. ‘அறம், பொருள், இன்பம்’ என்ற வாழ்வின் முப்பெரும் இலக்குகளில் அறம் முதன்மைப்படுத்தப்பட்டது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

எனவே, தனிமனித வாழ்வின் கற்பு நெறி முதல், மன்னனின் செங்கோல் ஆட்சி முறை வரை, சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் சங்கத் தமிழர்கள் அறத்தையே மையமாகக் கொண்டிருந்தனர்.

சங்க இலக்கியங்கள் வழி வெளிப்படும் இந்த அறக் கோட்பாடுகளின் சிறப்பினையும், அவை அன்றைய சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினையும், அவற்றின் வகைகளையும் இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**திறவுச் சொற்கள்**

அறம், அறநெறி, தருமம், ஒழுக்கம், கடமை, ஈகை, ஈதல், போர் அறம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சங்க இலக்கியம்.

**ஆய்வு நோக்கம்**

சங்க இலக்கியப் பாடல்களில் பொதிந்துள்ள ‘அறம்’ (Ethics/Righteousness) குறித்த விழுமியங்களை ஆழமாக ஆராய்ந்து, அக்கால மக்களின் வாழ்வியல் நெறிகளைப் புரிந்துகொள்வதே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும். அறத்தின் பொதுத் தன்மையை வரையறுத்தலில், சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் அறம் என்பது சமயச் சார்பற்ற மானிட அறமாக (Human Ethics) எவ்வாறு இருந்தது என்பதையும் அறத்தின் பரிமாணங்களில் வாழ்வின் முக்கியப் பிரிவுகளான அகம் (இல்வாழ்க்கை) மற்றும் புறம் (அரசியல், வீரம், கொடை) ஆகியவற்றில் அறம் எவ்வாறு நிலைநாட்டடப்பட்டது

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

என்பதையும் விரிவாக ஆராய்தல்.

**அறத்தின் பொருள்**

"அறம்" என்பது அறு என்னும் வினைச்சொல்லில் இருந்து அறம் பிறந்திருக்கலாம் என்று சில தமிழறிஞர்கள் கருதுகின்றனர்.

அறுத்துச் செல்லுதல், தீமைகளையும், தீவினையையும், மறுபிறப்புச் சுழற்சியையும் அறுத்து, நல்வழியில் செல்லுதல் அல்லது அறுதியாக (முடிவாக) வகுத்துச் சொல்லப்பட்ட நெறியாகும்.

சங்க காலத்தில் அறம் என்பது தனிப்பட்ட ஒழுக்கம் மட்டுமல்ல; அது தனி மனிதனின் எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் தூய்மை முதல், ஒரு நாட்டின் அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பின் நீதி வரை தழுவியிருக்கும் ஒட்டுமொத்த வாழ்வியல் தத்துவமாகும்.

**அறத்தின் அடிப்படை**

**அன்பும் அறனும்:** சங்க இலக்கியம் அகம் (காதல், குடும்பம்) மற்றும் புறம் (வீரம், ஆட்சி, கொடை) என வாழ்வைப் பகுத்திருந்தாலும், இரண்டிலும் அறம் பின்னிப் பிணைந்திருந்தது.

**இல்வாழ்க்கை:** இல்லறமே அறவாழ்க்கையின் அடிப்படையாகக் கருதப்பட்டது. அன்பும் அறமும் உடையதே இல்லறத்தின் பயன் என்று வள்ளுவரும் வலியுறுத்துகிறார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது"[1] (குறள் - 45)**

**சமூகப் பிணைப்பு:** மனிதன் சமூகக் கடலின் ஒரு துளி. அவன் எல்லோருடனும் தன்னை இணைத்துக் கொள்ளும்போதே மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிக்கு அடிப்படையான பொதுவிதியே அறமாகும்.

**"அறம் நனி சிறக்க அல்லது கெடுக" [2]**

**(ஐங்குறுநூறு - 7)**

அறம் பெருக வேண்டும், அல்லது அது அல்லாத தீய செயல்கள் முற்றிலுமாகக் கெட்டு அழிய வேண்டும் என்கிறது ஐங்குறுநூறு.

**அறத்தின் வகைகள்:**

சங்க இலக்கியத்தில் அறம் இரண்டு வகையாகப் புலப்படும்:

**உலகியற் அறம்** - நாளும் கடைபிடிக்க வேண்டிய நெறிகள்
(விருந்தோம்பல், உண்மை, அன்பு).

**அறிவியல் அறம்** - வாழ்வின் உயர்ந்த இலக்கை நோக்கிச் செல்லும்
சிந்தனை (இறைநம்பிக்கை, தியாகம்).

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**அறத்தின் தத்துவ நோக்கு**

சங்க நூல்கள் அறத்தை மத, சமயம் ஆகியவற்றோடு நேரடியாக இணைக்கவில்லை. அறம் மனிதநேய அடிப்படையில், வாழ்வின் நெறியாகவே எடுத்துக்கொள்ளப்பட்டது. இது தெய்வீக கட்டளையல்ல; மாறாக, மனித வாழ்க்கையின் சமநிலையைப் பேணும் நெறியாக விளங்குகிறது.

**அறத்தின் முக்கிய கூறுகள்**

**நீதி:** மனிதன் செய்யும் செயல் அனைத்தும் நீதிமுறையுடன் இருக்க வேண்டும்.

**கருணை:** பிற உயிர்களுக்கு இரக்கம் காட்டுதல்.

**தானம்:** தன்னுடைய சொத்துக்களை பிறருடன் பகிர்தல்.

**விருந்தோம்பல்:** வருகை தரும் விருந்தினரை மதித்தல்.

**அன்பு:** எல்லா அறங்களுக்கும் அடிப்படை.

**சங்க இலக்கியத்தில் அறத்தின் வெளிப்பாடு:**

சங்க இலக்கியப் பாடல்கள் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) அனைத்திலும் அறம் இயல்பாகவே கலந்து நிற்கின்றது. புலவர்கள் தங்கள் பாடல்களில் அரசர், வீரர், பொதுமக்கள் என அனைவருக்கும் அறநெறி வாழ்வை எடுத்துரைத்துள்ளனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**வணிக நோக்கற்ற அறம்**

சங்ககால மக்கள் அறம் செய்வதில் வணிக நோக்கம் கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர்.

**"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**அற விலை வணிகன் ஆஅய் அல்லன்"** [3]

**(புறநானூறு -134)**

என்று வள்ளல்களில் ஒருவனான ஆய் பற்றிக் குறிப்பிடுவது, மறுமைப்பயனை எதிர்பார்த்து அறம் செய்வது கூடாது என்னும் உயரிய அறத்தைப் புறநானுறு வழிப் பறைசாற்றுகிறது.

**அரசியல் அறம் (அரசனின் கடமை)**

சங்க இலக்கியங்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.

**செங்கோல் ஆட்சி:** மன்னனின் வெண்கொற்றக்குடையும் செங்கோலும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன.

**"அறநெறி முதற்றே அரசின் கொற்றம் "** [4]

**(புறநானூறு - 55)**

என்ற கூற்று அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சி மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**மக்கள் நலம்:** நீர்நிலைகளைப் பெருக்குதல், நிலவளம் கண்டு உணவு உற்பத்தியைப் பெருக்குதல், அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் ஆகியவை அரசனின் கடமைகளாகச் சொல்லப்பட்டன.

**“நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிர் அன்றே,**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்”** [5]

**(புறநானூறு -186)**

என்ற பாடல், மக்கள் நலம் பேணும் மன்னனின் இன்றியமையாமையைக் காட்டுகிறது.

**நடுநிலைமை:** குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து, துலாக்கோல் போல நடுநிலை தவறாமல் நீதி வழங்க ‘அறங்கூறவையம்’ துணைபுரிந்தது.

**கொடை அறம்**

சங்ககாலத் தமிழர்கள் வீரத்தைப் போலவே கொடையறத்தையும் மிக உயர்ந்த அறமாகக் கருதினர்.

**ஈதல் சிறப்பு:** அரியன என்று கருதாது தயங்காது கொடுத்தல், நாள்தோறும் கொடுத்தல், ஈவதால் வரும் இழப்பிற்கு வருந்தாமை ஆகியவை கொடையின் சிறப்புகளாக சங்க இலக்கியத்தில் பேசப்பட்டன.

**‘செல்வத்துப் பயனே ஈதல்’** [6] **(புறநானூறு -189)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

எனப் புறநானூறு கூறுகிறது.

**வள்ளல்கள்:** தம்மை நாடி வந்த இரவலர்கள் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்துக் கொடுக்கும் வள்ளல் தன்மை, மறுமை நோக்காமல் கொடுக்கும் உயரிய குணம் ஆகியவை சங்ககால வள்ளல்களின் சிறப்பாகப் பாடப்பட்டன.

**போர் அறம்**

போர்க்காலத்திலும் அறநெறிகளைக் கடைப்பிடிப்பது போர் அறம் எனப்பட்டது.

வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோருடன் போர் செய்யாமை, பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், மகப்பேறு அற்றவர் போன்றோருக்குத் துன்பம் வராமல் போர் புரிதல் ஆகியவை போர் அறமாகக் கொள்ளப்பட்டன. தன்னைவிட வலிமை குறைந்தவரோடு போர் செய்யாத அறமும் வலியுறுத்தப்பட்டது, என்பதை ஆவூர் மூலங்கிழாரின் கீழ்க்கண்ட பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**“எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்**
**எதிர்சென்று எறிதலும் செல்லான்” [6]**

**(புறநானூறு 301)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**அகப்பாடல்களில் அறம்**

அகப்பாடல்கள் காதல், உணர்ச்சி, குடும்ப உறவு போன்றவற்றைப் பேசினாலும், அவை அறநெறியில் உறுதியாக இருந்தன. காதல், நேர்மையுடன் சமுதாய ஒழுக்கத்தை மீறாமல் வெளிப்படுகிறது.பெண்களின் மரியாதை, குடும்பத்தின் கண்ணியம், சமூக ஒழுங்கு ஆகியவற்றை மீறாமல் காதல் நிகழ்வது சங்க அகப்பாடல்களில் காணப்படும் அறத்தின் அடையாளமாகும். இல்வாழ்க்கையில் பொருள் ஈட்டி, அதன்மூலம் அறம் செய்து இன்புறுவது தலைவனின் கடமையாகக் கருதப்பட்டதை அகநானூற்று பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**“அறந்தலைப் பிரியாது ஒழுகலும்”** [7]

**(அகம்: 173)**

மேலும், குறுந்தொகை மற்றும் நற்றிணை பாடல்களில் காதலர்கள் தங்கள் உறவை மறைத்து காத்து நடப்பது அறநெறி சார்ந்ததே.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் காணப்படும் அறங்கள் யாவும் ஏதோ ஒரு மதத்தைச் சார்ந்தோ அல்லது பிந்தைய காலத்தைப் போல மறுமைப் பயனை எதிர்பார்த்தோ தோன்றியவை அல்ல.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

அவை, சங்ககால மக்களின் இயல்பான வாழ்க்கையிலிருந்து, சமூகத்தின் நலனுக்காகத் தாமாகவே உருவான மானிட அறங்கள் ஆகும்.

இல்லறம், அரசியல், கொடை, போர் என வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் அறத்தை நிலைநாட்டியமையால், சங்ககாலம் ஒரு பொற்காலமாகக் கருதப்பட்டது. சங்கப்பாடல்கள், தனிமனிதனின் காதல், இல்லறம் என்ற இன்ப வாழ்வைப் பாடினாலும், அதில் அறநெறிகளைப் பிரிக்க முடியாத அங்கமாகப் பேணின. திருமணம், கற்பு, தலைவனின் கடமை தவறாமை போன்ற அக ஒழுகலாறுகளில் அறம் வலியுறுத்தப்பட்டது. சங்ககாலத் தமிழர்கள் அறம் வழுவாத இல்லறத்தையே சிறந்த வாழ்வியலாகக் கருதினர் என்பதை சங்க இலக்கியங்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. சங்க இலக்கியம் தமிழர் வாழ்வில் அறத்தை ஒரு மைய நெறியாகக் காட்டுகிறது. அறம் என்பது வெறும் கொள்கை அல்ல, வாழ்வின் ஒழுக்க அடித்தளம். இன்றைய சமூகத்திலும் அந்த அறநெறிகள் நிலைத்த முக்கியத்துவம் வாய்ந்தவை. சங்கத்தின் அறப் பார்வை, தமிழ் நாகரிகத்தின் நெறி மரபை வெளிப்படுத்தும் அழியாப் பாரம்பரியச் சின்னமாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**துணை நூற்பட்டியல்**


1. துரைசாமிப்பிள்ளை ஔவை.சு. புறநானூறு (பகுதி I, II ), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை, (2007).
2. ந.மு.வேங்கடசாமி நாட்டார் (தொகுப்பாசிரியர்), அகநானூறு மூலமும் உரையும், உருத்திரசன்மன் (பதிப்பாசிரியர்) கௌரா பதிப்பகம் , சென்னை, (2019).
3. ஐங்குறுநூறு – கழகவெளியீடு
4. திருக்குறள் - கழகவெளியீடு